# DINAMANI – 16.2.2010

# சிவில் சர்வீஸ் தேர்வுகளுக்கு பாரதியார் பல்கலை.யில் இலவசப் பயிற்சி

கோவை, பிப்.15: ஐஏஎஸ், ஐபிஎஸ் உள்ளிட்ட சிவில் சர்வீஸ் தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம் என்று பாரதியார் பல்கலைக் கழகம் அறிவித்துள்ளது.

பாரதியார் பல்கலை.யில் சிவில் சர்வீசஸ் தேர்வுகளுக்கான முழு நேர பயிற்சி மையம் பிப்ரவரி இறுதியில் துவங்கப்படுகிறது. இம் மையத்துக்கு ரூ.12.22 லட்சத்தை தமிழக அரசு வழங்கியுள்ளது.

முதல்கட்டமாக வரும் மே மாதம் நடைபெற உள்ள முதல் நிலைத் தேர்வுக்கு இம் மையத்தில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்கள் 100 பேர் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

பயிற்சி கையேடு, புத்தகங்கள், நூலக வசதி இலவசமாக வழங்கப்படும். இப் பயிற்சியைப் பெற விரும்பும் முதல்நிலைத் தேர்வுக்கு விண்ணப்பித்துள்ளவர்கள் தங்களது முழு விவரத்துடன் விண்ணப்பிக்க வேண்டும். ஒருங்கிணைப்பாளர், ஐஏஎஸ் பயிற்சி மையம், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை-646046 என்ற முகவரிக்கு பிப்.22-ம் தேதிக்குள் விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டும்.

இதுதொடர்பான விவரங்களுக்கு 0422-2424653, 2428238 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம். பல்கலை. இணையதளத்திலும் **(www.b-u.ac.in)** ஐஏஎஸ் பயிற்சி மையம் குறித்த விவரங்களைப் பெறலாம். பல்கலை. துணைவேந்தர் சி.சுவாமிநாதன் இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.